**கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர், பாலுற்பத்தித் தொழிற்துறைக்கு நெஸ்லே நிறுவனம் ஆற்றிவருகின்ற பங்களிப்பை பாராட்டியுள்ளார்**

*நிறுவனம் பாலுற்பத்தி மீதான தனது முதலீடுகளை விரைவுபடுத்தியுள்ள நிலையில் அவர் தொழிற்சாலைக்கு விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்*

கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன் அவர்கள் அண்மையில் குருணாகலில் அமைந்துள்ள நெஸ்லே நிறுவனத்தின் நவீன தொழிற்சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், இலங்கையின் பாலுற்பத்தித் தொழிற்துறைக்கு நெஸ்லே நிறுவனம் ஆற்றிவருகின்ற பங்களிப்புக்களுக்காக பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனியார்துறை மத்தியில் மிக அதிகளவில் புத்தம்புதிய பாலைச் சேகரித்து வருகின்ற நெஸ்லே நிறுவனம், *நெஸ்பிரே, மைலோ* மற்றும் *மில்க்மெயிட்* போன்ற தனது தயாரிப்புக்களை உற்பத்தி செய்வதற்கு, கிட்டத்தட்ட 20,000 வரையான உள்நாட்டுப் பண்ணையாளர்களிடமிருந்து புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்தமை மூலமாக 2015 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா 3.6 பில்லியன் தொகையை பங்களிப்பாக வழங்கியுள்ளது. பெரும்பாலும் உள்நாட்டில் பெறப்படுகின்ற மூலப்பொருட்களை உபயோகித்து தனது தயாரிப்புக்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதில் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் 22% வரையான கால்நடைகளைக் கொண்டுள்ள வட பிரதேசத்தில் காணப்படுகின்ற வளர்ச்சிவாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளும் முகமாக, அப்பிராந்தியத்தில் பாலுற்பத்தித்துறையை அபிவிருத்தி செய்து, தனது பால் சேகரிப்பு வலையமைப்பை, இந்த ஆண்டில் நிறுவனம் விஸ்தரிப்புச் செய்துவருகின்றது. மேலும் சர்வதேசரீதியாக 150 ஆண்டுகள் நிறைவையும், உள்நாட்டில் 110 ஆண்டுகள் நிறைவையும் கொண்டாடும் வகையில் 'Kiri Govi Diriya' என்ற செயற்திட்டத்தையும் நெஸ்லே நிறுவனம் அண்மையில் ஆரம்பித்துள்ளது. நாடளாவியரீதியிலான இச்செயற்திட்டத்தின் கீழ், 3,000 பாற்பண்ணையாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகளை கற்றுக்கொடுத்து, உயர் தரத்திலான பாலை இன்னும் அதிகளவில் உற்பத்தி செய்வதற்கு உதவும் வகையில் 150 பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. இந்த 150 பாற்பண்ணையாளர்களுக்கும் தமது வியாபாரத்தை மேம்பாடு செய்வதற்கு உதவும் வகையில் அத்தியாவசியமான பால் கறப்பு உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன் அவர்கள் கூறுகையில், *"இலங்கை பாலுற்பத்தித் தொழிற்துறையில் நீண்ட, வளமான ஒரு வரலாற்றை நெஸ்லே நிறுவனம் கொண்டுள்ளது. 1980 களின் ஆரம்பம் முதற்கொண்டு அரசாங்கம் மற்றும் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் ஒன்றாக இணைந்து இந்நிறுவனம் பணியாற்றி வந்துள்ளது. தரமான உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமன்றி, நிலைபேற்றியல் கொண்ட ஒரு வாழ்வாதாரத்தை உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு வழங்கி, உள்நாட்டில் பெறப்படுகின்ற புத்தம்புதிய பாலை உபயோகித்து உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு தயாரிப்புக்களை நுகர்வோருக்கு வழங்கிவருகின்ற நெஸ்லே நிறுவனம் இத்துறையில் அபிவிருத்தியை விரைவுபடுத்தி, வலுப்படுத்துவதற்கு முன்னெடுத்து வருகின்ற முயற்சிகளை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்."*

ஆண்டுதோறும் கால்நடைத் தீவனம், சினைப்படுத்தல் மற்றும் கால்நடை சுகாதாரம், பண்ணை முகாமைத்துவம் என பல்வேறுபட்ட தொழில்நுட்ப தலைப்புக்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பில் பாற்பண்ணையாளர்கள் மத்தியில் பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நெஸ்லே நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. பாற்பண்ணைகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி வசதிகள், அதிகளவான பாலை கறக்கின்ற பசுக்களை இனப்பெருக்கம் செய்வதற்கு செயற்கைமுறை சினைப்படுத்தல் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து நடமாடும் கால்நடை சிகிச்சை மையங்களை ஏற்பாடு செய்தல் போன்ற உதவிகளையும் வழங்கிவருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *"உள்நாட்டு சமூகத்துடன் நாம் கொண்டுள்ள வலுவான பிணைப்பு மற்றும் அவர்களுடைய தேவைகள் தொடர்பான ஆழமான புரிந்துணர்வு ஆகியவற்றின் காரணமாக இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வது எப்போதும் நெஸ்லே நிறுவனத்தின் இதயத்தை அண்மியதாக உள்ளது. எமது முயற்சிகள் எமது பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தில் நற்பயனை விளைவித்து, உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை மேம்படுத்தியுள்ளமைக்காக அரசாங்கம் இனங்காணல் அங்கீகாரத்தை வழங்கி, பாராட்டியுள்ளமையை அறிவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. நாம் தொடர்ந்தும்*

*அவர்களுடன் இணைந்து பணியாற்றி, இலங்கையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்து வருவோம்.''*

நெஸ்லே நிறுவனத்தின் முழு உற்பத்தி நடைமுறை, நவீன தொழில்நுட்பம் மற்றும் கடுமையான தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றை நேரடியாகக் கண்டறிந்து, அது தொடர்பில் குறிப்பிட்ட அமைச்சர், உலகளாவில் பிரசித்தி பெற்ற அதன் உயர் தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளுக்காக தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.